DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

*******

IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,

**PALLAVARAM.**

| | |
|---|---|
| CC. No. | 698/2023 |
| Prosecution: | அ.சா.7 |

| | | |
|---|---|---|
| **Deposition of witness for Name** | ~ | **சந்திரசேகரன்** (காவல் உதவி ஆணையாளர் ஓய்வு) |
| **Father' Name** | ~ | குருசாமி |
| **Village** | ~ | |
| **Taluk** | ~ | |
| **Caste** | ~ | |
| **Calling** | ~ | |
| **Religion** | ~ | |
| **Age** | ~ | |

Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 on the day **of Dt. 16.7.2025.**

**முதல் விசாரணை**

நான் கடந்த 2024ம் ஆண்டு தாம்பரம் மத்திய குற்றப்பிரிவில் காவல் உதவி ஆணையாளராக பணியாற்றி பணி நிறைவு பெற்று விட்டேன். கடந்த 2009ம் ஆண்டு குரோம்பேட்டை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றிய போது எனக்கு முன்னர் காவல் ஆய்வாளர் லஷ்மி நாராயணன் அவர்கள் தேன்மொழி அளித்த புகாரின் அடிப்படையில்

நிலைய குற்ற எண்.386/2009ல் சட்டப்பிரிவு 507,506(2) இ.த.ச. கீழ் ஜெகந்நாதன் என்பவருக்கு எதிராக வழக்கு பதிவு செய்து தொடர் விசாரணைக்கு எனது பார்வைக்கு வைக்கப்பட்டது. நான் தொடர் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு புகார்தாரர் மருத்துவர் தேன்மொழி மற்ற சாட்சிகளான மருத்துவர் மெய்யநாதன், பெரியசாமி, ஜெயந்தி, ஜானகிராமன், மோசஸ், சதீஷ் மனோகரன் ஆகியோரிடத்தில் தனித்தனியாக விசாரணை செய்து புகார்தாரரின் வாழ்க்கையை கடன் கொடுத்ததற்காக எதிரி காழ்ப்புணர்ச்சியுடன் புகார்தாரருக்கு கள்ளத்தொடர்பு இருப்பதாக பொய்யான தகவலை பரப்பி கொலை மிரட்டல் விடுத்தது தொடர்பாக அளித்த சங்கதிகளை வாக்குமூலமாக பதிவு செய்தேன். மேலும் புகார்தாரரிடம் இவ்வழக்கு தொடர்பாக ஆவணங்களை பெற்று இவ்வழக்கில் தொடர்புடைய எதிரி ஜெகந்நாத் என்பவரை கைது செய்த தேடி வரப்பட்ட நிலையில் 16.9.2009 அன்று மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் முன்பிணைவு பெற்று பிணையில் சென்றார். இவ்வழக்கின் இறுதி விசாரணை முடித்து எதிரிக்கு எதிராக மேற்படி சட்டப்பிரிவின் கீழ் இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

இவ்வழக்கில் 18.7.2009 அன்று அனுப்பப்பட்டதாக சொல்லப்படும் கடிதத்திற்கு 2 மாதம் காலதாமதமாக புகார் மனு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.1 காலதாமதமாக புகார் மனு கொடுத்ததற்கான காரணம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அ.சா.1 கொடுத்த புகார் மனு அ.சா.ஆ.1ல் கைப்பட கடிதம் எழுதி அனுப்பியதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். இவ்வழக்கில் கைப்பட எழுதப்பட்ட கடிதம் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.1 புகாரில் கடைசியாக குறிப்பிடப்பட்ட 4 வரிகள் புகார் கொடுக்கப்பட்டு பின்னிட்டு இடைச்சேர்க்கையாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

அ.சா.1 குரோம்பேட்டை காவல் நிலைய எல்லையில் வசித்து வருதற்கான ஆவணம் ஏதும் உண்டா என்றால் இல்லை. அ.சா.ஆ.2 ஆவணம் ஜெயபால் மற்றும் இந்துமதி ஆகியோருக்கு அனுப்பப்பட்தாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஜெயபால் மற்றும் இந்துமதி ஆகியோரை இவ்வழக்கில் விசாரணை செய்து சாட்சியாக சேர்த்துள்ளீரா என்றால் இல்லை. ஆனால் அவர்களை விசாரணை

செய்தேன். வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. மேற்படி ஜெயபால் மற்றும் இந்துமதி ஆகியோருக்கு கடிதம் கிடைக்கப்பெற்றதற்கான ஆவணங்கள் எதையும் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். அ.சா.2 மெய்யநாதன் எனது விசாரணையில் 18.7.2009 தேதியிட்டு அனுப்பப்பட்டதாக சொல்லப்படும் கடிதத்தை கைப்பற்றினீரா என்றால் இல்லை.

அ.சா.4 ஜானகிராமன் எனது விசாரணையில் 18.7.2009 தேதியிட்ட கடிதத்தை அ.சா.2 மெய்யநாதன் ஜானகிராமனிடம் காண்பித்து அதன் பின்னிட்டு அந்த கடித விவரத்தை தெரிந்து கொண்டதாக எனது விசாரணையில் சொல்லி உள்ளார் என்றால் சரிதான். அ.சா.4 ஜானகிராமனுக்கு நேரடியாக மேற்குறிப்பிட்ட கடிதம் அனுப்பப்படவில்லை என்றால் சரிதான். அ.சா.2 க்கு திருவள்ளுவர் உளுந்தை கிராமத்திற்கு முகவரியிட்டு அனுப்பப்பட்ட கடிதத்தை மேற்படி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சென்று விசாரணை செய்தீரா என்றால் இல்லை. அ.சா.1 க்கு தொலைபேசியில் மிரட்டல் விடுத்ததாக சொன்ன நிலையில் எந்த தொலைபேசி எண்ணில் இருந்து எந்த தொலைபேசி எண்ணிற்கு மிரட்டல் வந்ததாக எனது விசாரணையில் தெரிய வந்ததா என்றால் இல்லை.

இவ்வழக்கில் அ.சா.1 தெரிவித்த தொலைபேசி மிரட்டல் தொடர்பாக சி.டி.ஆர் பதிவுகள் பெறப்பட்டதா என்றால் இல்லை. மேற்படி சி.டி.ஆர் பதிவுகள் பெறப்பட்டு இருந்தால் தொலைபேசிக்கு அழைப்பு வந்த விவரம் தெரிந்து இருக்கும் என்றால் சரிதான். நான் இவ்வழக்கில் சி.டி.ஆர் பதிவுகள் பெற்று பார்த்தபோது எதிரியிடம் இருந்து எவ்வித அழைப்பும் வராததால் அந்த ஆவணத்தை தாக்கல் செய்தால் அரசு தரப்பு வழக்கிற்கு பாதகம் ஏற்படும் என்பதால் அந்த ஆவணத்தை நான் இவ்வழக்கில் வேண்டும் என்றே தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கு பதிவு செய்யப்படுவதற்கு முன்பாகவே எதிரி தரப்பிற்கும் புகார்தாரர் தரப்பிற்கும் பல வழக்குகள் நிலுவையில் இருந்த விவரம் எனது விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் ஆம். எதிரியின் குடும்பத்தினரை பழிவாங்க புகார்தாரர் தவறாக ஆவணங்களை உற்பத்தி செய்து பொய்யாக புகார் மனு கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. நான் இவ்வழக்கில் ஏற்கனவே புகார்தாரர் கொடுத்த புகார் பிழையானது என இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் இல்லை. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித

சம்பந்தமும் இல்லை என்றாலும் இவ்வழக்கை முறையாக புலன் விசாணை செய்யாமல் எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அ.சா.1 முதல் அ.சா.5 வரையான சாட்சிகள் அ.சா.1 யை எந்த தேதியில் மிரட்டினார் என எனது விசாரணையில் குறிப்பிட்டு சொல்லி உள்ளார்களா என்றால் இல்லை. புகாரில் குறிப்பிட்டு உள்ளது போல் எந்த ஒரு வழக்கு சம்பவமும் நடைபெறாததால் தான் எந்த தேதியில் சம்பவம் நடைபெற்றதாக குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

S/d xxxx

Typewritten to my dictation in open
court read over to the witness in tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.
S/d xxxx
District Munsif-cum
Judicial Magistrate,
Pallavaram.